𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

௩-ம்
புத்தகம்

பத்திரகிரயம்
1௵ 2—12—0
6௴ 1—8—0
3௴ 0—14—0
1காபி- 0—2—6
இலங்கைக்கு
3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

௨௨-ம்
இலக்கம்

பத்திரிகிரயத்தை மணியார்டராகவாவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

BRAHMAVIDYAPATHRIKA.

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௯ ௵ மே ௴ ௧௫ ௳ விரோதி ௵ வைகாசி ௴ ௩ ௳

[illegible]

[illegible]

𑌶𑌂𑌕𑌰𑌾𑌵𑌤𑌾𑌰𑌃

([illegible])

—:(*):—

[illegible]

நம் ப்ரம்மவித்தியா பத்திரிகாபிமானிகளில் கையொப்பப் பணம் அனுப்பாதிருக்கும் நண்பர்களே!

இப்பத்திரிகையின் மூன்றாவது வருஷம் ஆரம்பமாகி இப்பொழுது 11-மாசங்கள் கழிந்தும் நீங்கள் இதுவரையில் உங்கள் கையொப்பத் தொகைகளை யனுப்பிவிட இசையாது ஆலசியமாயிருந்தால் இப்பொது நன்மையை நாம் தளர்வுறாது நடத்துதல் எப்படியாம். உங்கள் பேருதவிகளையே ஆதாரமாக நம்பி இவ்வுலோகோபகார நன்முயற்சியை மேற்கொண்ட நாம் அது கிடைக்கப்பெறுதொழியின் மற்றதற்கு யாதுசெய்வேம். பத்திரிகை அச்சிடுதற்கும் காகிதமுதலியன வாங்குதற்கும் தபாற்செலவு கொடுத்தற்கும் அவ்வப்பொழுது எவ்வளவு பொருள் வேண்டுமென்பது நீங்களறியாததன்றே. உங்களில் ஒவ்வொருவரும் "நம் தொகை சிறிதுதானே இஃதவர்க்கோர் பொருட்டா மெல்ல வனுப்புவோம்" என எண்ணிப் பெரும்பாலாரங்ஙனமிருப்பின், நங்கருமம் எக்கதியுறும். ஆதலின், இவைகளைச் சற்றே சிந்தித்து உங்கள் கைபொப்பத் தொகைகளை உடனே அனுப்பிவிடுதலே நீங்கள் எமக்குச் செயற்கரியதொரு பேருபகாரமாம்.

சரித்திரப்பயிற்சி.

பௌத்தமதத்தின் குறைவு.

ஸ்ரீசங்கராசாரியர் அவதாரம்.

(தொடர்பு.)

ஸ்ரீமத் சங்கராசாரியர் அந்நியமத ஸ்தாபகர்கள்போலத் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே காலென்று பிடிவாதம் பிடி

[illegible]

[illegible]

[illegible]

த்துப் பயமுண்டாக்கி மற்றவர்களைத் தம்மதத்தினராகும்படி செய்யவில்லை. கல்வியறிவேயில்லாத துருக்கர் மதத்தையுண்டாக்கினவனைப் போலவாவது, கிறிஸ்துமதத்தை யுண்டாக்கினவனைப் போலவாவது நேரே கடவுளுடைய கட்டளையினால் புதியமதத்தை யுண்டுபண்ண வந்தேனென்று சொல்லவில்லை. ஆனால் மனிதர்களடையும் பிறப்பை யடைந்து அவர்கள் செய்யும் நடை யுடை பாவனைகளை யனுசரித்து, உலகவியற்கையினின்று பிறழாமல் கூர்மையான புத்தியினாலே விசேஷிக்கப்பட்ட யுக்தியினாலே இந்தப் பரதக்கண்ட முழுமையும் தம்மிடத்தில் நன்னம்பிக்கையுண்டாக்கி, வைதிக மதத்தை நிலைநிறுத்தினார். புலையன் மாமேறிமுதல் அந்தணர் வரையுமுள்ள எல்லாச் சாதியாருடைய தொழில்களிலும் இலேசாக அறியக்கூடாத மோக்ஷசாத்திரத்திலும் வியக்கத்தக்க தேர்ச்சியடைந்து, பண்டிதர்களால் மாத்திரமன்றிப் பாமரர்களாலும் பிதாவென்றே குலதெய்வமென்றே குருவென்றே ஆதரிக்கப்பட்டவரானார். ஏனென்றால் இப்பெரியவரின் அவதாரகாலத்திற்கு முன் மதியூகமில்லாத ஒருவனுக்கு வேதங்களெல்லாம் முன்பின் விரோதமாய்த் தோன்றினதினாலும் புராணங்களொன்றுமில்லாமல் பதினெண் கணக்காயிருந்து தந்தம் தெய்வமே மற்றவைகளைக்காட்டிலும் மேன்மையுடையதென்ன்று சொன்னதினாலும் புத்தர் மதமுண்டானபின்னர் வேத சாத்திரங்கள் தாயற்ற பிள்ளைபோல் அருகிக்கிடந்தமையாலும் அவைகளையெல்லாம் மாற்றி நான்கு வேதங்களின் ஒற்றுமையைக் காட்டினதும் சாத்திரங்களுக்கும் செல்வாக்கை யுண்டுபண்ணியதும் யாவருக்குந் தம்மிடத்து நம்பிக்கையையுண்டுபண்ணியதும், அநேக நூற்றாண்டுகள் சென்றபிறகு உலக சம்ரக்ஷணைக்காகத் தோன்றுகின்ற லோகோத்தரமான குணங்களோடு கூடிய பெரியவர்களில் இவர் ஒருவரென்று காட்டுகின்றன. சாதாரணமா யுண்டாகக்கூடிய ஜனங்களோடொத்த விசிஷ்ட மதாசிரியர், தருக்க மதாசிரியர், திரிபதாகைநூலாசிரியர் இவர்களுடைய சரித்திரங்கள் இக்காலத்தில் எல்லோராலும் படிக்கப்பட்ட சூத்திரபாஷ்யம் ஒன்றினாலேயே இந்தியாவில் அஸ்தமனமடையாத சூரியனைப்போன்ற இவருடைய சரிதமாத்திரம் ஒருவராலும் படிக்கப்படவில்லையென்பதை யெண்ணி இவ்விஷயமாய் எழுதத் தொடங்குவாம். பெரியோர்களே! பத்திரிகைக்குத் தகாத சில வர்ணனைகள் ஆங்காங்கு காணப்பட்டால் அவை சங்கர விஜயத்திலிருந்து சுருக்கியெழுதப்பட்டன வென்றும் நம்முடையவல்ல வென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மேற்குக் கடற்கரையில் பாவியோங்கி வளர்ந்திருக்கும் மரங்களில் பாடிக்கொண்டிருக்கிற பக்ஷிகள் நிறைந்ததும், ஓயாமல் வளர்ந்துகொண்டிருக்கிற பயிர் வகைகளால் சிறப்புற்றிருக்கிற வயல் தோட்டம் இவைகளோடு கூடியதும், மோகனம் ஸ்தம்பனம் முதலிய ஜாலவித்தைகளுக்கு இருப்பிடமாயிருப்பதும், கல்வி கேள்விகளாலுயர்ந்த வித்துவான்களால் அலங்கரிக்கப்பெற்றதும், இதனழகைக்கண்டு தேவலோகத்தையும் விட்டுவந்த சாஸ்தாவினால் காக்கப்பெற்றதுமான கேரளதேசத்தில் விருஷபாசலமென்றோர் மலையிருக்கின்றது. அவ்விடத்தில் உலகுக்கெல்லாங் களிப்பையுண்டாக்குகின்ற ஒளி பொருந்திய நக்ஷத்திரக் கூட்டங்களுக்குச் சந்திரன் போலவும் விலைபெற்ற ரத்தினங்கள் கோக்கப்பட்ட மாலைக்கு நாயகமணிபோலவும், தக்க வித்துவா

[illegible]

ன்கள் நிறைந்த சபைக்குப் பிரகஸ்பதி பகவானுக்குவமைசான்ற சபாநாயகன்போலவும் விசித்திர விஷயங்கள் நிறைந்த அந்த மலைக்கோரமுகைச் செய்யாநின்ற காலடியென்ற ஓர் ஊரிருக்கின்றது. அந்தக் காலடியென்னும் கிராமமானது நடுவில் வளர்வனவான நீலோற்பலங்களை வேறுபிக்கக்கூடாத நீலவர்ணமான ஜலம் நிறைந்ததும், பார்ப்பதினாலேயே எல்லாப்பாவங்களையும் போக்க வல்லதுமான ஆணியென்ற ஓர் ஆற்றினால் பின்னிவிட்ட கூந்தலோடுகூடிய ஓரணங்கைப்போல்விளக்கும். இவ்வூரில் ஓர் தம்பதி யிருந்தார்கள். ஒருவருடைய தவப்பேறே மற்றவருடைய உருவாய் வந்ததுபோ லிருப்பவர்கள். காற்றோடு நெருப்புக்குள்ள சிநேகம்போன்ற சிநேகத்தையுடையவர்கள். ஒருவரையொருவர் பார்ப்பதினாலுண்டாகிற முகவுல்லாசத்தினால் தபனன் தமரை இவர்களுடைய அநுராகத்தை வென்றவர்கள் அமுதையே பனம்பண்ணினதாலுண்டான சலிப்பினால் டலவகைப்பட்ட வஸ்துக்களை யநுபவிக்கப் பூவுலகிற்றோன்றிய இரதி மன்மதனை ஒத்தவர்கள் அணிமாதிய அஷ்டபூதிகளுக்கும் உறையுள் போன்றவர்கள். பாவங்களுக்கெல்லாம் பயத்தை யுண்டுபண்ணத் தக்கவர்கள். ஆபத்தை யடைந்த ஏழைகட்கு எப்போதுங் கைகொடுப்பவர்கள். இப்படிப்பட்ட கல்லியாண குணங்களோடுகூடிய இவர்கள் தனதானிய சமர்த்தியை யுடையவர்களாயும் கன்மகாண்டங்களிற் கூறப்பட்ட எல்லா அறங்களையும் நடத்துபவர்களாயும், இம்மையில் சுகத்தைக் கொடுக்கக்கூடிய எல்லாவற்றையுமனுபவிக்கிறவர்களாயும், எப்போதும் துக்கமென்பதே கண்டறியாத மனதோடு கூடியவர்களாயும் உலகத்தாரெல்லாராலும் கொண்டாடப்பட்டவர்களாயுமிருந்தார்கள்.

ஆனால் நல்லவர்களுடைய மனத்திற்குத் தங்களுடைய குணம் ஒழுக்கம் பெருந்தன்மை இவைகளினால் களிப்பையுண்டாக்கிக்கொண்டிருந்தபோதிலும், விசேஷித்த செல்வத்தினால் புகழ்பெற்றவர்களானாலும், வழிப்போக்கர்கள், ஏழைகள், ஆதரவற்றவர்கள் இவர்களைக் காப்பவர்களானாலும் காலஞ்செல்லச்செல்லப் புத்திரனுண்டாகவில்லை யென்கிற பெருந்துக்கம் இவர்களை வருத்தந் தொடங்கிற்று. இங்ஙனமிருக்க, ஓர் தினத்தில் அவர்கள் முன் நாரதர் வந்து சேர்ந்தனர். அவரோ! மூவுலகுஞ் சுழன்றுவரும் இயல்புடையவர். அவ்வவ்விடத்துச் சங்கதி முற்றுமறிந்தவர். திருநீறு திருக்கண்மணிமாலை சடாமுடி இவற்றைத் தரித்தும் படிகமணிபோன்ற நிர்மலமாயுள்ள சரீரம்பெற்றவர். ஸ்ரீபரமேசுவரனது திவ்விய திருநாமங்களை இடைவிடாது ஜெபித்துப் பாகவதோத்தமரெனப் பெயர் பெற்றவர். தாம் தம் புலமைக்கேற்ப இடைவிடாது மீட்டிவரும் வீணையில் தும்பிகள் மோகித் தோனிகள் செய்ய அதற்கிணையாய்த் திவ்வியகானஞ் செய்பவர். திருமதி மண்டலம்போன்ற வெண்ணிறம் பெற்றவர். இத்தகையமாக்ஷிமைபொருந்திய அந்நான்முகன் அரும்புதல்வனை அத்தம்பதிகள் கண்டார்கள். இவரது திருமேனியைக் கண்ணுற்று வியப்படைந்து பரமானந்தம் பெருகி இவ்வற்புதமாமுனியின் திருமேனியை வலம்வந்து அவரது திருவடிகளைப் பணிந்தார்கள். உடனே தன் நிலைமையை அவருக்கறிவித்துத் தமக்கோர் குழவியுண்டாகவேண்டிய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொண்டனர். அதற்கு அம்மாமுனி மனமிரங்கித் தனது சரித்திரத்தை ஒருவாறு சுருக்கமாய் எடுத்துரைத்தார். அது வரு

[illegible], 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 [illegible]𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌰𑌹𑌿𑌤𑌃, [illegible] 𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌮𑌣𑌿𑌸𑌂𑌕𑌾𑌶 [illegible] 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 [illegible] 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 [illegible] 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌗𑌾𑌣𑌪𑌤𑍍𑌯𑌶𑌾𑌕𑍍𑌤𑌾𑌦𑌿 [illegible]

மாறு:—"நான் தினந்தோறும் மூவுலகங்களையும் ஒருவாறு சுழன்றுவருவேன், பற்பல தேசங்களில் பற்பல ஆச்சரியங்களைக் கண்ணுறுவேன், இற்றைக்கு யான் கண்டறியாதெனில்:— அநேகர் அருமறைமுடிகளில் கூறிய எமது மதத்தை விட்டொழிந்தார்கள், கன்மகாண்டம், ஞானகாண்டம் இவற்றுள் கூறிய விதிகளைக் கடந்தார்கள். நூதனமாய்த் தோன்றிய வைணவம், காணபத்தியம், சாக்தமுதலிய ஏனைய மதங்களிற் புகுந்தார்கள்- துவைதமென்னும் மதம் ஓங்கி வளர்கின்றது; இவ்விதக் குழப்பம் உலகத்திலுண்டாக யான் ஒருபொழுதுங் கண்டேனில்லை. எனது நாமதேயம் நாரதர் என்பார்கள். யான் இவ்வளவு சுற்றிவந்தும் வேறெங்குங் காணாத ஓர் பேரானந்ததை இக்கு கண்டேன். அதாவது:—எவ்வித காலத்திலும் நற்குணங்கள் நிறையப்பெற்றும் உண்மையான மதத்தைக்கொண்டும் கடவுளினிடம் பேரன்புற்று அவரது திருவடிகளை இடைவிடாது சிந்தித்தும் இக்கன்ம பூமியின்கண் கன்மங்களை விதிவழுவாது அனுட்டித்தும் நன்னடைபொருந்தி இல்லறவாழ்க்கையிற் சிறந்தவரான உங்களைக் கண்டதே. ஆயினும் இவ்வளவு நற்குணம் நற்செய்கை நிறைந்த உங்கட்கு நற்றவங்கள் புரிந்தும் மனம் மாத்திரம் ஏதோ ஒரு துயரத்தைப் பெற்றிருப்பதாய்த் தமது முகக்குறிகளால் யான் அறிந்தேனாதலால் அவற்றைச் சொல்லக்கூடுமாயின் என்னிடஞ் சொல்லவேண்டும். நீங்களோ! தவத்திற் சிறந்த அந்தணமணிகள். ஆதலால் வாய்மையையுரைப்பீரெனக் கருதுகிறேன். ஓர் சமயம் அத்துயரத்தை நிவர்த்திக்க என்னால் முடியுமாயின் அஃதை விலக்கத் தடையில்லை" என்பது. இங்ஙனம் அம்மாமலரோன்மகனுரைக்க அதுகேட்டு அகமகிழ்ந்த அத்தம்பதிகள் மீண்டும் அவரது கழலிணைகளை வணங்கித் தமது துயரை முற்றும் மறந்து ஆனந்தக் கடலில் அமிழ்ந்தவர்கள்போல் அதிகவியப்படைந்து தழை தழைப்புடன் தமது திருவாய்களால் தம்மனத்தில நீடூழிகாலமாய்க் கருதிய கருத்தை வெளியிட்டார்கள். அதாவது:—உலகெலாம்படைத்த நான்முகன் புதல்வனும் அருமறைகளின் பொருளறிந்த மாமுனியும் தவசீலனும் தர்மசீலனுமான உனக்கு முன்னின்று ஓர் மொழி மொழிய யாம் ஒருக்கால் வலிமை பெறுவோமோ? ஆயினும் எம்மிடம் தாம் காரணமின்றிக கருணைமாரி பொழிதலால் ஏதோ சில வெடுத்துரைக்கப் புக்காம். சிவகுருவெனவும் ஆரியை எனவும் எங்களது திருநாமம். கடவுள் திருவருட் பெருக்கத்தால் எங்களுக்குத் தனதானிய விஷயங்களில் பெருமைஉண்டாகி அதனால் வறியோர்களை இயன்றமட்டும் ஆதரித்து மனமகிழ்ந்து துயரத்தின் பெருமையை யறியாது கூடியமட்டும் இல்லறத்தை நடாத்திவந்தோம். திருமதிமண்டலம்போன்ற நின்மலமாகிய எமது திருமரபில் மக்களைப்பெறாத மாபாதஞ்செய்தவர்கள் இதுகாறும் ஒருவருமிருந்திலர். எமக்கோ அத்தீமை வந்தது யாது காரணம்பற்றியோ அறியோம். "புதல்வனற்றோர் புகுவார் நரக"மென ஆன்றோர் மூதுரை மொழியைக்கேட்டோம்; ஆராத்துயர்வை யடையப்பெற்றோம்; என்செய்வோம் அமலனே! தேவீர் எமக்கு அருள்புரிந்து இத்துயரத்தை அகற்றுவீராக" வென்று இவ்விதமுரைத்து அவரது இணையடிகளைத் தொட்டுநின்ற அத்தம்பதிகளை நோக்கி அம்முனிவர்கோமான் சொல்லுவாராயினர். அன்பர்களே! நும் அக

[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

𑌚𑌿𑌦𑌂𑌬𑌰𑌂 — 𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌃. 𑌵𑍈𑌶𑌾𑌖𑌮𑌾𑌸𑌃- ௩

[illegible]

[illegible]

—:*:(*):*:—

[illegible]

த்துயரம் ஒழியவழிதேடுவேன் வீணில வசனத்தை ஒழியுங்கள் என்றுவரமளித்துப் பர்வதனென்னும் மாமுனியுடன் கலந்து மறைந்தார். சிவகுருவென்னும் அவ்வந்தணரும் தமது மனைவாட்டியுடன் மனமகிழ்ந்து முனிவர்சொல்மாறுதென முழுநம்பிக்கையுடன் முன்னிலும் அதிகமாய் முழுமுதற்கடவுளான் முக்கட்பிரான் திருவடித்தாமரைகளை இடைவிடாது போற்றினின்றார். இங்ஙனமிருக்க அந்நாரத மாமுனிவரும் "நாம் இவர்க்களித்த வாக்கை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்றுஎண்ணித் தமது தந்தையெழுந்தருளிய சத்தியலோகஞ்சென்று அங்கு பற்பல முனிகள் 64 கலைகளையும் ஆறு சாத்திரங்களையும் ஆராய்ந்து அவரைத் துதிசெய்து அவரைச்சூழ்ந்துநிற்க நடுவிலெழுந்தருளிய தமது தந்தையாரை வணங்கித் தாம் பூமியிற்கண்ட இச்சங்கதி ஒருவாறெடுத்துரைத்தார்.

வரும்.

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்: விரோதி-ஸு வைகாசி-மீ 3-உ

கடவுள்.

தொடர்பு.

—:0:—

“ஜடம் ஜீவன் ஈசுவரன் என்னும் முப்பொருளும் நித்தியமாயின் அதில் கடவுளுக்குப் பெருமை யாது” என மற்றோர் வினா நிகழ்கின்றது. இவ்வினா எழுப்பும் பிறமதத்தவர் கருத்து யாதெனில், “வைதிக மதத்தவருள் ஆத்திகராயுள்ள எல்லோரும் ஜடம், ஜீவன், ஈசுவரன் என்னும் முப்பொருளும் அநாதி நித்தியமெனச் சாதிக்கின்றார்கள். அம்மூன்றும நித்தியப்பொருள்களாயின் கடவுளை ஆதிநடுவந்தமிலாச் சோதியெனவும் எக்காலமுமுள்ளவனெனவும் யாங்ஙனங் கூறலமையும். ஜீவர்களும், ஜடங்களும் அங்ஙனமே அநாதிநித்தியமாய் ஆதி நடு வந்தமிலாச்சோதியெனப்படவேண்டி வருதலாலென்க. ஆதலால், அநாதியான பரமேசுவரனுக்கு அவ்வநாதித்தன்மை சிறப்பிலக்கணமாதலால் அதை ஒழிக்கும் வழி இச்சட ஜீவர்களுக்கும் அநாதித்தன்மையை ஒப்புதல் எவ்வாற்றானும் அமையாதாம். நாம் மேற்கூறிய காரணங்களால் ஜட ஜீவர்கள் அநித்தியமாயின் அவர்கள் ஆக்குவோனின்றி ஆகாராதலால் அவற்றை ஆக்குவோன் அநாதிநித்திய சுயம்புவான கடவுளென்றே விளங்கும். இங்ஙனமாயின் அக்கடவுள் சிருஷ்டியென்னுந் தொழிலைக் கைக்கொள்வதன் முன்னர் ஜீவ ஜடவத்துக்கள் இல்லாமையால் அவர் தன்பொருட்டே சிருட்டித்தாரென்பதும் பிறர்பொருட்டுச் சிருட்டித்தாரில்லையென்பதும் அறிஞர்களுக்கு வெளியாகுமன்றோ. சிருட்டி தன்பொருட்டாயின் அதிற் சில குற்றங்கள் நிகழுமின், அவை எமது நோக்கத்திற்குக் குற்றமாயினும் கடவுளினது பெருமையை நோக்கக் குற்றமாகாது. ஏனெனில்,

[illegible]

[illegible]

மனிதர்கள் தம்முள் தாமே குற்றக்குறைகள் அறியும் முற்றறிவு பெறாதிருக்க இவர் சிற்றறிவைக்கொண்டு கடவுளினது பெருமையை விசாரித்தல் நரிவாலைக்கொண்டு கடலாழம்பார்ப்பதுபோலாமன்றோ? ஆதலால், ஜீவ ஜடங்கள் அநித்தியங்களெனவும் கடவுளே நித்தியப்பொருளெனவும் ஏற்பட்டது. ஜீவன் ஜடம் என்பனவற்றை அநித்தியமென்பது, இது ஒழிந்துவிடுமென்பதுபற்றியல்ல. மற்று உண்டாதல் மாத்திரையாலென்க. உலகத்தில் அநித்தியப்பொருள் மூவகைப்படும். சில பிறந்து நாசமெய்தா. சில பிறவாதழிவுபாடெய்தும். மற்றும் சில பிறந்தொழியும். இவைகளை முறையே அநாதியென்றும் அனந்தமென்றும் அநித்தியமென்றும் மொழிவர். அதற்குதாரணம்: ஆத்திகருள் வேதாந்தியெனும் ஓர் சார்பார் வேதாந்திகளெனப் பெயர் வைத்துக்கொண்டு மோக்ஷம் என்பது நித்தியமெனவும் அது அவித்தையின் ஒழிவெனவும் அது உண்டாயினும் ஒழியாது. ஆத ஆதலால் அதை அனந்தமெனச் சொல்லாமெனவும் சொல்லுகின்றார்கள். அவர்களே அநாதியான ஜீவனுக்கு உபாதியொழியுங்கால் அசீவத்தன்மையும் ஒழியுமெனவும் அஃது அநாதியெனவுங் கூறிநிற்பர். இனிக் குடமுதலியவை ஆதியந்தங்களைப் பெற்றனவென்பதைக் கண்டோம். இனி மற்றவர் மதத்தில் மோக்ஷமானது ஆதியுள்ளதும் அந்தமில்லாததுமாவதுபோல் நம்மதத்தில் ஜீவர்கள் ஆதியுள்ளவர்களும் அந்தமில்லாதவர்களுமாகின்றார்கள். ஆதலின் நம்மதத்தில் ஜீவன் மோக்ஷம் இவ்விரண்டும் ஒருதன்மையுடைத்து. மற்றவர் மதத்தில் வேற்றுமைபெற்றன. இனி உண்டாகும் பொருளெல்லாம் ஒழிந்திடுமெனக்கொண்டு ஜீவன் கடவுளால் சிருட்டிக்கப்பட்டனாயின் கடபடங்களைப்போல் ஒருக்கால் அழிவுபாடுறுவனென்பதும் ஒவ்வாது. நையாயிகர் கொண்டபடி ஓர் பொருளின் அழிவுபாட்டபாவம் உண்டாய்ப் பின்னே நித்தியமாயிருத்தலைக் காண்டலாலென்க. ஆதலால் நித்தியனான கடவுளால் தன்பொருட்டெனச் சிருட்டிக்கப்பட்ட இவ்வான்மகோடிகள் அவர் தமக்களித்த தனுகாரணாதிகளைக்கொண்டு அவரது கைங்கரியத்தை முழு நம்பிக்கையுடன் நிறைவேற்றினால் அவனுக்கு மோக்ஷத்தையும் அங்ஙனம் செய்யாதொழிபவனுக்கு நரகத்தையும் அவர் கொடுப்பாரென்பதில் தடையில்லை. ஆத்லால் யாம் கூறியபடி கடவுளொருவரே நித்தியரென்பது துணிபு. இங்ஙனமிருக்க முப்பொருளும் நித்தியமெனக் கூறுதல் கடவுளினது இயற்கையாகிய அநாதி நித்தியத்தன்மையை அறியாமையாலும் அவரது சர்வவல்லமையை ஒழிக்கவுமென்றே அறிந்தொழிக" என்பது. இதற்கு விடை வருமாறு:—

கடவுளது இயற்கை எமது சிற்றறிவுக்கெட்டாவிடினும் உலகவியற்கையும் ஆன்மாக்களினது இயற்கையும் நமது சிற்றறிவுக்கெட்டுமென்பதில் எம்மதத்தினரும் தடைகூறார். கடவுளை யாம் அறிவதும் நாத்திகரிடம் கடவுளுண்மையை விளக்குவதும் செய்தியாற்செய்பவனை அனுமிக்கும் வழியாலாதலால், அவனது செய்தியாகிய உலகவியற்கையை யாம் முற்றிலும் அறிந்திருத்தல் வேண்டியது அவசியம். உலகத்தில் நாம் காணும் பொருள்களும் ஆன்மகோடிகளும் அவர் சரீரங்களும் பற்பல வேற்றுமைகளைப் பெற்றிருக்கின்றனவாதலால், அவ்வேற்றுமை நிலைபெறவேண்டிக் காரணங்களை ஆராயுங்கால் அக்கார

[illegible]

ணங்களுள் அநாதித்தன்மையும் ஒன்ருய் முடிகின்றது. ஜீவர்களிடம் உண்டாகும் வேற்றுமைகளுக்கு காரணமான அநாதியான கன்மமென்னுந்தொழிலுக்குஇடமாய ஆன்மாவும் அநாதியென்பதுசொல்லாதமைந்தது. இங்ஙனமுலகவியற்கையும் ஆன்மவியற்கையும் அநாதித்தன்மைபெற்று முடிய அவர்களை அநித்தியரெனவும் சிருட்டிக்கப்பட்டவரெனவுங் கூறுதல் அறிஞர்களுக்கு நகை விளக்காதெங்ஙன மொழியும். இவற்றை அறியாது தமது சித்தத்திற்குத் தோன்றியபடி கடவுள் ஏதேதோ செய்வாரொன்றும் அதுவே அவருக்கு அமைந்த இயற்கையென்பதும் நூலாராய்ச்சி யின்மையாலென்பது தெள்ளெனப்படுகின்றது. இனி அங்ஙனங் கூறின் கடவுளுக்கும் ஜட ஜீவர்களுக்கும்வேற்றுமை யாதெனக் கடிந்துரைப்பீரேல், கூறுதும்:—கடவுள் இலக்கணமும் ஜடம் ஆன்மாக்கள் இவைகளி னிலக்கணமும் எவ்வாற்ருனும் ஒன்றுபட்டிருக்கக் கூடாதென்பது உமது கருத்தோ? மற்று அவருக்கென்சில சிறப்பிலக்கணங்கள் அமையவேண்டுமென்பதோ. முன்னையதாயின், அவரும் ஓர் பொருள்; மற்றதும் ஓர் பொருள் எனப் பொருட்டன்மை எல்லாவற்றுக்கும் பொதுவாதலால் இங்ஙனமெடுத்துரைக்க ஒருவாறு அழுக்குற்று அதையும் மாற்ற முயன்று அவர் ஒருவரே பொருள் மற்றவை பொருளன்றென ஒருவாறு நீர் உரைத்திடின் உமது மதநூலான விவிலியநூற்கொள்கை அடியோடழிந்துவிடுமென்பதை நீர் அறிந்திலரோ! ஓர் சமயம் உம்மவருள் வேதாந்திகள் என்பவர் அங்ஙனம் கூறுகின்ருரோ வென்பீராயின் அவர்கள் மதநூலாகிய வேதாந்தங்கள் கடவுள் ஒருவனே உண்மைப் பொருளெனத் தாபிக்கவேண்டி, மாயை அவித்தை இவைகளின் இலக்கணங்களை விரித்து நின்றனவாம். உமது புத்தகம் அவைகளைக் குறித்து ஒன்றும் பேசாது வெறுங் கதைகளையே நிரப்பி நின்றமையால், அவர் சொல்லும் யுக்திகளைச் சொல்லித் தப்பித்துக்கொள்ளவும் உமக்கு வழியில்லையே. இனி அவரும் பகுத்தறிவுடையவர் ஆன்மாக்களும் பகுத்தறிவுடையவர்களென ஆன்மாக்களுக்கு ஓர் பொதுவிலக்கணம் அமையின் இதனுல் கடவுளின் தெய்வத்தை ஒழிந்துவிடுமோ! இனி உமது புத்தப்பிரகாரம் கருணை அகாரணத்துவேஷம் இளைப்பாறுதல் மனத்துயரம் கோபம் வன்கண்மை லோகோபகாரசிந்தை இவை முதலிய பல குணங்கள் ஆன்மாக்களுக்கும் அவருக்கும் பொதுவாய் நிற்றலால் இது மட்டுங்கொண்டு அவர்க்குள்ள கடவுட்டன்மை ஒழியுமென்னின், உமது வாதம் பயனற்றதாய் நின்று கடவுள் என்பதே ஓர் பொருள் நிலைபெருது நாத்திகவாதமாய் ஒழியும். மற்ருேர் வழி எடுத்துரைப்பீரேல் அஃது எமக்கும் உடன்பாடே. ஆயின், அவனுக்குச் சிறப்பான இலக்கணம் யாதென வினவுவீரேல், அகிலமறிந்தவன், எல்லாஞ் செய்பவன், அருண்மூர்த்தி, அளவை கடந்தவன், அநாதிமுத்தன், சுத்தசித்து, நின்மலன் என்பதாதியான பல விலக்கணங்களுள. இவைகளை விட்டொழித்து ஏதோ ஒரு இலக்கணக் குறைவு வருவதாய் எண்ணி, ஏதோ தாம் கட்டிக்கொண்ட ஓர் இலக்கணத்துக்கு விரோதம் வருவதால் அதற்கெனச் சீவ ஜடங்களை ஆதியுள்ளதெனக்கூறி அதற்கெனக் கடவுளிடம் ஆன்மார்த்த சிருட்டியை நிலைபெறச்செய்வது எவ்வளவோ பெருங் குறைவென அவர் ஆராய்ந்தொழிவாராக.

மற்றது வரும்.

[illegible] '' 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌦𑍂𑌰𑌃 '' 𑌅𑌨𑌾𑌦𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 '' 𑌕𑍇𑌵𑌲𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 '' 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌃. 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑌿 𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌿 [illegible]. [illegible] 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯 [illegible] 𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑍍𑌯 [illegible] 𑌤𑌤𑌃 𑌜𑌗𑌜𑍍𑌜𑍀𑌵𑌯𑍋𑌃 [illegible] 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌤𑌤𑌃 [illegible] 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌚 𑌨𑌿𑌰𑌸𑍍𑌯 [illegible] 𑌇𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌯𑌾𑌵𑌤𑍍.

𑌕𑍍𑌰𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿.

𑌗𑍀𑌰𑍍𑌵𑌾𑌣𑌭𑌾𑌷𑌾.

𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂.

𑌅𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌃

[illegible] 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌂 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 𑌇𑌤𑌿 [illegible] 𑌵𑍇𑌦𑌾𑌸𑍍𑌤𑍁 [illegible] 𑌵𑌿𑌨𑌾 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 [illegible] 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌭𑌾𑌷𑌾𑌯𑌾𑌂 [illegible]. 𑌯𑌥𑌾 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌵𑍈𑌦𑌿𑌕𑌂 𑌚𑍇𑌤𑌿. 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌵𑍇𑌦𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇𑌷𑍁. 𑌵𑍈𑌦𑌿𑌕𑌂 𑌵𑍇𑌦𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 [illegible]. [illegible] 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌃 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇. [illegible] 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 [illegible]. 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯 [illegible] 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑍇𑌦𑌂 [illegible]. 𑌅𑌥 𑌸𑍍𑌵𑌰𑌾𑌶𑍍𑌚 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 [illegible] 𑌪𑌦𑌾𑌨𑌾𑌂 𑌅𑌰𑍍𑌥𑌵𑌿𑌶𑍇𑌷𑌬𑍋𑌧 [illegible] 𑌸𑍍𑌵𑌰𑌾𑌃 [illegible] 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁. 𑌅𑌤𑌃 𑌪𑌦𑌾𑌨𑌾𑌂 [illegible] 𑌸𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 [illegible] 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌮𑍇𑌵𑍇𑌤𑌿. [illegible] 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌶𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌿 [illegible] 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌶𑌾𑌖𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 [illegible]. 𑌅𑌥 𑌪𑌾𑌣𑌿𑌨𑌿𑌃 𑌵𑍈𑌦𑌿𑌕𑌲𑍌𑌕𑌿𑌕𑌪𑌦𑌜𑌾𑌤𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 [illegible] 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌤𑌤𑌃 [illegible]. 𑌅𑌤 𑌏𑌵 [illegible] ''𑌮𑍁𑌖𑌂 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 [illegible]'' 𑌇𑌤𑌿 [illegible]. 𑌯𑌦𑌿 𑌨𑌾𑌮 [illegible] 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 [illegible] 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑍇 [illegible] 𑌹𑍃𑌦𑌯𑌂 [illegible] 𑌭𑌾𑌷𑌾𑌯𑌾𑌃 [illegible]

சம்ஸ்கிருதபாஷை.

வியாகரணம்.

தொடர்பு.

—:0:—

வியாகரணமென்பது வேதாங்கமென முன் எடுத்துரைத்தோம். அது வேதங்களுக்கு அங்கமாவதெப்படியெனில், வேதங்கள் சொற்றொகுதிகளாதலால் அவைகள் இலக்கணமின்றி ஒருதன்மை பெறமாட்டாமையாலென்க. வடமொழிச் சொற்கள் பொதுச்சொற்களெனவும் வைதிகச் சொற்களெனவும் இருவகைப்பட்டன. அவற்றுள் பொதுச் சொற்களென்பன வேதங்களிலும் மற்றெல்லாக் காவியங்களிலும் உபயோகிக்கத்தக்கன. மற்றை வைதிகச் சொற்களென்பன வேதங்களில் மாத்திரம் உபயோகிக்கத்தக்கன. சொற்களைப்போல் சொற்றொடர்புகளிலும் தோன்றல் திரிதல் கெடுதல் முதலிய விகாரங்களும் இருவகைப்பட்டே யிருக்கின்றன. அவைகளும் வேதங்களிலும் மற்றைப் புத்தகங்களிலும் உபயோகிக்கத்தக்கனவும் வேதங்களில் மட்டும் உபயோகிக்கத்தக்கனவுமென இருவகைப்படும். வேதங்களிலுள்ள சொற்கள் வைதிகச்சொற்களும் சிறப்புச் சிறப்பாய் ஒவ்வொரு வேதங்களில் பிரயோகிக்கத்தக்கன ஒவ்வோர்விதச் சொற்களெனவும் அவற்றின் விகாரங்களும் ஒவ்வோர் வேதங்களில் வேற்றுமைப்பட்டுமிருக்கின்றன. வைதிக்ச்சொற்களின் ஒலி உதாத்தம் முதலிய பல சுரங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதால், சொற்களைப் பொருட்படுத்துவதும் அதைப்பற்றியே நிற்றலால் அதை விதிவழுவாதுச்சரித்தல் இன்றியமையாது. இவ்வித் விசேஷங்களை எடுத்துப் பகுத்து அச்சொல்லிலக்கணம் சொற்றொடரிலக்கணம் ஒலியிலக்கணம் இவைகளை நன்கு புலப்படுத்தும் புத்தகம் வியாகரணமாதலால் அது வேதத்துக்கு முக்கியமான அங்கமே. இவ்வங்கம் முன்பு தனியே வேதங்களுக்கு இலக்கணம் உண்டாகவும் அவற்றுள்ளும் ருக்குவேதம் முதலிய வேதங்களுக்குச் சிறப்பாய்ப் பிராதசாக்கியம்முதலிய இலக்கணங்களாகவும் இயற்றப்பட்டன. பின்பு பாணினி வியாகரணஞ் செய்யுங்காலத்து அவற்றைச் சுருக்கி ஓர் சிறு கிரந்தமாக்கினர். இப்பொழுதுள்ள வியாகரணத்தில் வைதிக இலக்கணம் லௌகிக இலக்கணம் இரண்டும் முறையே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனாற்றான் இதை வேதபுருஷனது திருமுகமண்டலமெனச் சொல்லுவர். இத்தன்மைத்தான வியாகரணமின்றி நமது வேதங்களைச் சாத்தல் மிக அரிது. நிலைபெற்ற ஓர் இலக்கணத்தாற் கட்டுண்ட பாஷையே உண்மையை விளக்கவும் பண்டைக்காலத்து நன்கொள்கைகளை எடுத்துக்காட்டவும் பெருங்கருவியாய் நிற்கும். அங்ஙனமின்றிக் காலந்தோறும் பாஷை வேறுபட்டால் முன்னோர் கருத்துப் பின்னோர்க்கு வெளியாகாது. அதுகொண்டே சர்வஞ்ஞனை முக்கட்பிரான் இவ்வடமொழி என்றைக்கும் நிலைபெறவேண்டி வேதாகமங்களைத் திருவாய்மலர்ந்தருளியபடி அவ்வக்காலத்துதித்த பாணினிமுதலிய மாமுனிவர்களுக்கு இவ்வியாகரணத்தையும் உபதேசித்ததாய் ஆன்றோர் வழங்குவர். அவ்வக்காலத்துதித்த மாமுனிவர் ஆண்டுவந்த வியாகரண வலிமையாற்றான் வடமொழி

[illegible]

𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍍.

[illegible]

—*—

[illegible]

சமஸ்கிருதம் (நன்றாய்ச் செய்யப்பட்டது) எனப்படும். இவ்வித வியாகரணம தற்காலம் உலகத்தில வழஙகிவரும் எந்தப் பாஷையிலும இல்லையென ஓர் ஜர்மனதேசத்துப் பண்டிதர் சொல்லுகின்றார். நாம் ஆராய்ந்தமட்டில இவ்வித இலக்கணம ஓர் பாஷையிலும் தோன்றவேயில்லை. திராவிடபாஷையில் இப்பாணினிமாமுனி இயற்றிய வியாகரணத்திற்கு நிகராய்க் குறுமுனி திருவாய் மலர்ந்தருளிய அகத்தியமெனனும் ஓர் பெருநூல் அப்பாஷையை அபிமானிப்பவர் பரிபாலனக்குறைவால் மறைந்துபோயிற்று. ஏதோ ஒவ்வோரிடங்களில் பாதிரம் சிற்சில அகப்படுகின்றன. ஏதோ நமது இறைவனார் திருவருட்பிரசாதத்தால் நமது பாணினிமாமுனி இயற்றிய வடமொழி இலககணப் பெருநூல பதஞ்சலிமாமுனிவர் உரைசெய்யப் பதம்பெற்று இக்காலத்தும் வழஙகிவருகினறது. இவ் வியாகரணம் சொல்லிலக்கணம் கூறுதல் மட்டிலமையாது பற்பல தத்துவங்களையும் எடுத்து விளக்கியிருக்கின்றது. அவைகளைப்பற்றிப் பின் எழுதுவாம். இஙஙனமிருகக இக்காலத்துச் சிலர் மேற்றிசையார் எழுதிய சில புததகங்களைப்படித்து அதை நம்பித் தம் ஜாதியாசாரங்களைக் கைவிட்டு ஏதோ சிற்சில வேறு பாஷைச் சொற்கள் இவ்வடமொழியிற் கலந்திருப்பதாய் எழுதித் தம்முள் தாமே மகிழ்ந்து வருகின்றார்கள். அவ் விவரம் பின்வரும்.

விக்கிரகாராதனம்.

தொடர்பு.

—:0:—

பூஜை என்பது ஆன்மார்த்தமென்றும் பரார்த்தமென்றும் ஆக இருவகைப்படுமென்றும், அவற்றுள் ஆன்மார்த்தத்திற்கு ஸம்ஸ்காரங்கள் குறைவுபடுமென்றும் பரார்த்தத்திற்கு ஸம்ஸ்காரம் மிகுதியென்று முன்னரே கூறியுள்ளோமல்லமா? அவற்றுள் ஆன்மார்த்தமென்பது இருவகைப்படும். சரமென்றும் ஸ்திரமென்றும். சரமென்பது நீர் நில முதலியவை. ஸ்திரமென்பது லிங்கமுதலியவை. ஆன்மார்த்த பரார்த்தங்களாகிய இருவகைப் பூஜைகளிலும் சிலர் மூர்த்தியுள்ளது உத்தமம். அச்சிலைகளில் அபிஷேகம் செய்த நீரை உட்கொண்டால் அது சரீரத்திற்கு நற்குணங்களைப் பயக்குமென்று வைத்திய சாத்திரப் பரமாசிரியரான வாக்பட்டாசாரியரது கருத்து. "கற்களிற் கலந்து சுத்திபெற்ற நீர் பத்தியமாகுமென்று அவருரைத்தலால்" என்க. இரும்புமுதலியவற்றில் தண்ணீர் கலந்தால் அஃது சரீரத்திற்கு நற்குணங்கள் விளைவிக்காதெனக் கருதி அச்சரமூர்த்திகளில அபிஷேகஞ் செய்யக் கூடாதென விலக்கியிருக்கிறார்கள். உலோகத்தால் ஏற்பட்ட விம்பங்களில் அதன்கணுள்ள அழுக்கு அறவேண்டி அதன்மேல் பற்பல பழரசங்களும் பிறவற்றையும் அபிஷேகம் பண்ணப்படும் அவற்றை உட்கொள்ளக்கூடாதென ஆன்றோர் கருத்து. அதே விம்பம் வெள்ளியல்லது பொன்னாலமைந்ததாக விருப்பின் அதன் அபிஷேகத் தீர்த்தத்தை யுட்கொள்ளலாம். ஆன்மார்த்த பூஜைக்கென ஏற்பட்ட ஓர் பிம்பத்தை ஒருவனே பிரதிட்டை செய்வான். ஒருவனே அஃதைப் பரிசிப்பான். ஒருவனே வழிபடுவான். ஒருவனே காண்பான். ஆதலால் அதில அபிஷேகம் உற்சவமுதலியவை குறைவாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவன் பூஜிக்கத் தொடங்கியபொழுதே சுசியனவிடத்தி லுட்காருவான். உலோகங்களாற் செய்யப்பட்ட பாத்திரங்களையே துணையாகக் கொள்வான். நற்குணமுள்ளனவான பத்திரங்களையே கொய்வான். அவ்விதமே வஸ்திரத்தால் வடிகட்டித் தாமிரமல்லது பித்தளைப் பாத்திரங்களில் தெள்ளிய நீரை உபயோகப்படுத்துவான். அவனது மனம் அசைவுறாது நிலைபெறவேண்டி முதலில் தனக்கு இஷ்டமான தெய்வத்தைப் பிரார்த்தித்து உடனே பிராணாயாமஞ்செய்து மனத்தை ஓர் வழி நிறுத்தி ஏனைய விஷயங்களை விட்டொ

[illegible]

[illegible]

[illegible]

ழித்துத் தான் செய்யக்கருதிய பரமேசுவரனது வழிபாட்டை ஒருவாறு சிந்தித்துச் சங்கற்பமென்னும் அங்கத்தை நிறைவேற்றுவான். அபிஷேகக் கலசத்தை முன் வைத்து அதில் தண்ணீரைக் கலந்து புஷ்பம் சந்தனம் இவைகளையும் போட்டுத் தன் கையால் ஸ்பரிசித்துத் தன் சக்தியையுஞ்செலுத்தித்தேனு முத்திரையைக் காட்டி அனேக தீர்த்தாப்சங்களைப் பாவித்து அதே தீர்த்தத்தால் பற்பல வேலைகளைச் செய்வான். வேறே ஐந்து கலசங்களை வைத்து ஒன்றல்லது இரண்டுமெணி சாவகாசம் அதில் தண்ணீரை நிரப்பி அபிஷேகக்கிரியை முடிவில் அதைப் பிம்பத்திற் சேர்ப்பான். பிறகு அவ்வத் தேவதைகளின் மந்திரங்களை உச்சரித்துத் தன்னுள்ளத்தில் உலகெலாங் கடந்த கடவுளைத் தியானிப்பான். ஒரு க்ஷணமாவது அப்பரம்பொருளன்றி வேறு பொருளறியாது அதன்மயமாய் நின்று உலகப்பொருளை எல்லாம் அதுவாகவே பாவிப்பான். உடனே துளசிமுதலிய நல்ல தழைகளால் தனது இருதயமுதல் சிரசு வரையில் பேணுக்காகத் தொட்டுத்தன் சரீரத்தில் அக்காலம் வாய்த்த ஆற்றலை அத்தழைவழியாய் அவ்விம்பத்தின்கண் அமர்த்தித் தன்கையாற்றொட்டுத் தனது இரு விழிகளாலும் நன்றாய் நோக்குவான். இவ்வித மந்திரங்களால் ஆவாகனஞ் செய்தபிறகு அதிற்றானே கடவுளை வழிபடத்தொடங்குவான். அதேக்ஷணத்தில் வந்து சேர்ந்த பிராணசக்தி இருதயத்தின்கணுள்ள அழுக்குகளுடன் வந்திருப்பதால் அவற்றை விலக்க முன் அபிஷேக கலசத்தில் வைத்திருக்கும் அந் நல்ல தீர்த்தத்தை எடுத்து அபிஷேகம் செய்கின்றான். பிறகு நிர்மலமாய் ஈசுவரகலையமைந்த அவ்விம்பத்திற்குப் பருத்தி பட்டுநூல்களாலமைந்ததும் மற்றவரணியாததுமான வஸ்திரங்களைச் சாத்திச் சந்தனமுதலியவற்றைத தரித்து அதன்கண் கடவுளைத் தியானஞ்செய்துகொண்டு நல்ல பத்திர புஷ்பங்களைப்போடுவார்கள். வீடெல்லாம் நன்னாற்றங் கமிழச் சாம்பிராணி முதலியவற்றின் புகையையுண்டாக்குவான். தீபத்தாலுபசரிப்பான்; கற்பூரங்களைக் கொளுத்துவான்; ஸ்தோத்திரங்கள் பண்ணுவான்; வந்தனங்கள் செய்வான்; இஃதே பூஜை எனப்படும். இவ்வித ஆன்மார்த்த பூஜையைச் செய்வதால் அவனுக்குமட்டில் குணமாகிறதுமன்றி இப்பூஜாசாலத்தில் அவ்வீட்டிற் சஞ்சரிக்கும் ஏனையவர்களுக்கும் பெருங் குணமுண்டு. சாம்பிராணித் தூபங்களை முகர்வதாலும் கற்பூரத்தூபத்தைக் கையிட்டுக் கண்களில் ஒத்திக்கொள்வதாலும் அக்கடவுளுக்கு அபிஷேகஞ்செய்த நீரை யுட்கொள்வதாலும் அவர் சரீரம், மனம், ஆன்மா இவைகள் சுத்திபெறுகின்றன. அக்காலத்தில் சிறிது கடவுளைச் சிந்தித்தலால் ஆன்மாவுக்கு ஈடேற்றமுண்டாகின்றது. ஆதலால் இவ்வித உபாயம் ஆரியர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இஃது மெத்த சிலாக்கியம். ஓரோ தொழில் இருபயனை எய்தியதுபோல் இவர் எடுத்துக்காட்டிய ஓரோ தொழில் மனம், ஆன்மா, சரீரம் எல்லாவற்றையும் சுத்திசெய்து ஈடேற்றமுண்டாக்குமென்பது மிக வியக்கத்தக்கதல்லவோ! இவ்வித வழியைக் கண்டுபிடித்தவர் பெருமை எத்தகையுடைத்தென யாம் சொல்லலாம். பரார்த்தபூஜையின் பெருமை பிறகு வெளிப்படும்.

வரும்.

ஆரியஜனபரிபாலினி.

இப்பெயர் தரித்த பத்திரிகை ஒன்று இத்தென்னாட்டின்தலை நகரமாகிய சென்னைபுரியிற் றோன்றிப் பற்பலவிடங்களிலும்

𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃-

[illegible]

[illegible]

பார்த்துவருவதை நமது ஆரிய நண்பர்கள் பலர் கண்ணுற்றிருப்பார்கள். இப்பத்திரிகை இந்த விரோதி ௵ சித்திரையுடன் முதற்றேதியன்று தோன்றியதாகக் காணப்படுகின்றது. அப்பத்திரிகையின் நல்வரவை நாம முன்னமே கேட்டிருந்தோமாகலால் அது என்று கிட்டுமோவென்றிருந்த நமக்கு அதில் ஓர் பிரதி கிடைக்க மிகுந்த ஆனந்தத்தோடு அதனை நன்றாக வாசித்துப் பார்த்தலும் இது இக்காலத்து நம்தேசத்து இவ்வளவு சுலப விலைக்குக் கிடைக்க நேர்ந்ததும் இப்படிப்பட்ட ஒரு பரோபகார சிந்தை நம்மவருள் உதித்ததும் அதனை இலேசாக மிக எளியோரும் அதி சொற்ப விலையாகிய காலணாக்கொடுத்து வாங்கிப் படிக்கப்பெற்றதும் நமது பரமேசுவரனது திருவருட்செயலென்றே நினைத்து நாம் என்றுமறியாத ஓர் பேரானந்த மடைந்தோமென்பதை இன்று இவ்விடத்து எழுதி முடியத்தக்கதன்று. ஏனெனில், நாம் இத்தமிழ் வழக்கு நிலத்தில் பற்பல நாடுகளில் பண்டிதர் பாமரர் பலரோடு நன்கு ஊடாடிப் பழகி நம்மவர் தன்மைகளெல்லாம் முற்றவறிந்திருக்கின்றோம். நம்மவரிற் பலர் இக்காலத்தில் தமக்கு வேண்டும் நற்சுகம் தரத்தக்க கல்விப்பயிற்சியை ஆலசியம் செய்து கைவிட்டதும், ஒற்றுமை யிழந்ததும், கைத்தொழின் மறந்ததும், சோம்பற்கடற்படிந்ததும், பற்பல காரணங்களால் வறுமையுற்றுப் பெரும்பான்மையோர் அன்னவஸ்திரத்திற்கே ஆலாய்ப் பறப்பதும், வறியவரும் சிறிது செல்வமுடையாரும் பெரும் பொருளுடையோரும் பொருள்வந்தாற் போதுமென்று அதற்காக எத்தன்மையுடைய செய்யாதவேலைகளும் செய்யத்தலைப்பட்டுச் சாதிசமயாசாரம் விடுத்துப் பலவாற்றாலும் கேடுறுதலும் ஆகிய இவையெல்லாம் வரவர நம் தேசத்திலே பெருகி வருவதாகி நம் வைதிகமதமானது இன்னும் சிறிதுகாலத்தில் பெயர் சொல்லத்தானும் இல்லாது ஒழிந்துவிடுமோ என்று கவலையுற்றிருந்த நம் கண்ணெதிரேதானே இத்தனை காட்சிகளெல்லாம் காணப்பெற்றோமேயென்பதனாலென்க. இதற்கு முன்னும் அமிர்தபோதனி, விஞ்ஞானசிந்தாமணி, உதயபானு, விஞ்ஞானவர்த்தனி, திராவிடதேசாபிமானி, லோகானந்தம் என்பனவும், இன்னும் சிலபத்திரிகைகளும் ஒவ்வோர் காலத்துத் தோன்றி நீடித்து நிற்பன போற்காட்டி அற்பாயுளுற்று ஒழிந்துபோயின. அவைகளெல்லாம் ஒழிதற்குக் காரணம் பொருட்குறைவும், பலரையும் ஆதரித்தல் செய்யாமையும், உட்கலகங்களும், வீண் சண்டைகளும், முயற்சிக்குறைவும், பேராசையுமென்க. பரோபகார சிந்தையுள்ள பத்திரிகாபிமானிகள் பலர் அப்படிப்பட்ட பத்திரிகைகள் தோன்றுங்காலத்து எவ்வளவு அன்போடு அவற்றைப் பெற்று மகிழ்ந்து ஆதரித்து வந்தார்களோ அத்தனை துயர் அவை இறந்தகாலத்துப் பட்டிருப்பார்களென்பது சொல்லவேண்டுவதில்லை. இப்படி நிலையில்லாப் பத்திரிகைகள் பல தோன்றியொழிதலினால் சிறிது அபிமானமுள்ளவர்க்கும் பெரிது வெறுப்புத் தோன்றுவதாயிற்று, இவை இப்படியிருத்தலால், எல்லா நலமும் ஒருங்கு அமையப்பெற்ற ஒரு பத்திரிகை என்று தோன்றுமோ என எதிர்பார்த்திருந்த பல அபிமானிகள் மனங்களிக்க இது உண்டாயிற்று. இப்பத்திரிகையை நம்மவர் ஆதரித்துப் பெற்று வாங்கித் தாம் வாசித்தும் பலவிடங்களிலும் பரவச்செய்தும் வருவார்களாயின் நம் தேசமும் நம்மவரும் பலவாற்றாலும் க்ஷேமப்படுவோர்களென்பதற்கு எட்டுணையும் சந்தேகிக்க வேண்டுவதில்லை. ஏனெனில், இக்கருத்துக்கொண்டு நம் சென்னையிற்றோன்றிய "இந்துடிராக்டு சோசைட்டி" யானது தான் தோற்றிச் சிறிதுகாலமாயினும் இதற்குள் எவ்வளவு வலிமையுடையவராலும் எளிதில் முடிக்கத்தகாத எத்தனையோ காரியங்களை மிகச்சுலபமாக

[illegible]

முடித்து, நம்மவர்களுள் ஒற்றுமைப் பயிரை விளைத்து மதவிசுவாசம் உண்டாக்கிப் பாதிரிமார் செய்யும் படுமோசமெல்லாம் பஞ்சாய்ப் பறக்கவடித்து இன்னும் பற்பல நன்மைகளை மேலும் மேலும் புரிந்துவருதலே இதற்குப்போதிய சான்றாம். அச்சொசைட்டியால் விளைந்த பெரும் பயன்கள் பலவற்றை நாம் கண்ணாரக்கண்டுள்ளோம். சென்னைபுரியில் சர்வதாரி௵ தை௴ 5௳ நடந்த "இந்து டிராக்டு சொசைட்டியின் வருஷபூர்த்தி உற்சவ"த்தன்று வடக்கேயுள்ள விசாகபட்டணம், தெற்கேயுள்ள கன்னியாகுமரி மேற்கேயுள்ள மலையாளம் இடையேயுள்ள பற்பல நாடுகள் இவற்றிலிருந்து வந்த சம்ஸ்கிருத, திராவிட, ஆந்திர, மலையாள, அங்கில முதலிய பற்பல பாஷா பண்டித சிரோன்மணிகளும், செல்வா, வர்த்தகர், கைத்தொழிலாளர் முதலியோரும் தம் உள்வேற்றுமையொழித்துத் தேசாபிமானம் மதாபிமானத்தோடு சகோதர பாவமுற்றுத் தத்தம் குறை முறைகளைச் சொல்லி நற்சுகம்பெறுதற்கு வேண்டிய சூழ்ச்சிகள் பல தேடிக் களித்துக்கொண்டாடிய காட்சியே ஓர் பேரற்புதக்காட்சியாம். இது ஒன்றோ! அங்கங்கே அடர்ந்து கிடந்து தூங்கிய வித்துவான்களெல்லாம் காடுநாடாகவும் ஊர் ஊராகவும் வீதி வீதியாகவும் சென்று சென்று புறமத ஆபாசங்களையும், அவர் செய்யும் நயவஞ்சகங்களையும், கேடுகளையும் பலவாறு யாவர்க்கும் வெளியாக்கி நம்மத உண்மைகளையும், மேன்மைகளையும், நாம் முன்னுக்கு வரவேண்டிய வழிகளையும் எடுத்து உணர்த்திவருதலும் ஒன்றாம். அதுமட்டோ! அங்கங்குள்ள நம் இந்துசகோதரர்கள் பலர் தாம் அறியாமையினாலும் பிறபோதனையினாலும் விட்டொழிந்த தம்மத ஜாதியாசாரங்களை மீண்டும் பேராவலோடு நன்கறிந்து அநுட்டிக்கத் தொடங்கியதும் மற்றொன்றாம். அவர் அம்மட்டில் நில்லாது இன்னும் தம்போன்ற சகோதரரெல்லாம் தம்போல் நன்னிலைபெற வேண்டுமென்று அதற்கு வேண்டிய பல முயற்சிகள் செய்து வருதல் எவற்றினும் மேலானதாம். இன்னும், நம்மத உண்மையறியாது பிறர் செய்யும் மோசத்தால் அன்னியமதப் படுகுழியில் விழுந்த நம் இந்து சகோதரர் பலர் மீண்டும் தம் மேலேற எண்ணிப் பல பிராயச்சித்த வழியால் உய்திபெறுதலும், அவ்வாறு செய்ய முயலுதலும் பேரற்புதமாம். சுருக்கச்சொல்லின், நம் தேசத்துள்ள பற்பல ஊராரும் நன்னிலைபெறத்தக்க செயல்கள் பல செய்தலில் முயற்சியுண்டாயிற்றென்பதை நாமே சென்னை முதல் தென்னாடு பலவிடத்துஞ் சென்று நேர்நோக்கக் கண்டுள்ளோம். இவை அவ் "விந்துடிராக்டு சொஸைட்டி"யின் நன்முயற்சியால் விளைந்த பேறென்றால் அதன் பெருமை எவ்வளவென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். இவை இங்ஙனமாகலின், அதன் சார்பிற்றோன்றிய இப்பத்திரிகையால் விளையும் பயனும் இன்னும் சிறக்குமென்பது நாம் சொல்லவேண்டியதில்லை. நம்மதாபிமானிகள் யாவரும் அப்பத்திரிகையின் அபிவிருத்தியைப் பற்றித்தக்க முயற்சி செய்தல் இன்றியமையாத கடனாம். இவ்வாரியஜனபரிபாலினியானது என்றும் நல்வாழ்வு பெற்று மேன்மேலும் தழைத்தோங்கத் திருவருள்புரியுமாறு நமது பரமேசுவரனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்துடிராக்டுசொசைட்டியின் ஓர் மெம்பர்.

[illegible]

[illegible]

— : ❋ : —

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பஞ்சாங்க நியாயாதர்சம்.

தொடர்பு.

சத்கருமங்களில் கவலையுள்ள விவேகிகள் யாவர்க்கும் இது விஷயத்தில் முதலில் தோன்றுவது யாதெனில்,— திதியென்பது கேவலம் நம்முடைய அபிப்பிராயத்தைப்பொறுத்ததன்றே, வெவ்வேறு பஞ்சாங்கங்களில் ஒரு தினத்துத் திதியின் நாழிகை வெவ்வேறாய்க் காணப்பட்டாலும் உண்மையில் திதியின் நாழிகை ஒன்றாய்த்தானே யிருத்தல் வேண்டும்; ஆகையால், திதிவிஷயத்தில் இவ்விரண்டு பஞ்சாங்கங்களும் சொல்வது சரியாயிருப்பது அசம்பாவிதமன்றோ? இதன்வாஸ்தவம் இன்னதென்று தெரிந்துகொள்ள நம்மாற்கூடியவரையில் முயலவேண்டியதுநமதுகடமையாயிற்றே என்பது.

இதுபற்றியே, முந்தி வெவ்வேறிடங்களில் கூடிய சபைகளில் பெரிய வித்துவான்கள் இதுவிஷயமாகப் பேசியிருக்கிறார்கள். சிரார்த்த விஷயம் மேற்கூறியபடி இரண்டுபடாமல் திதிவிஷயத்தில் நமக்குள்ள ஞானத்தை ஒரு வியவஸ்தைப்படுத்த ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் அவர்கள் சந்நிதானத்திலிருந்து, ஜ்யோதிஷம், தர்மசாத்திரம் முதலிய விஷயங்களில் பிரஜ்ஞாவான்களாகிய திருவிசைநல்லூர் பிரஹ்மஸ்ரீ இராமசுப்பாசாஸ்திரிகள், திருவையாறு பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ணசாஸ்திரிகள், ஸாமிஜ்யோஸ்யர் முதலிய அநேகருக்குச் சென்ற மார்கழிமாசம் கஎ.ம் தேதியில், மடத்திற் கூடியசபைக்கு வரும்படி ஸ்ரீமுகம் போயிற்று. அந்த ஸ்ரீமுகத்தைச் சிரமேற்கொண்டு, திருவையாற்றில் கோமற்பஞ்சாங்கமென்ற திருக்கணித பஞ்சாங்கங்கணிக்கும் பிரம்மஸ்ரீ வேங்கடேசுவரதீக்ஷிதரும், சுந்தரேசுவரசிரௌதிகளும், பாலகிர்ஷ்ண சாஸ்திரிகளும் வேறுள்ள அநேக வைதிக லௌகிக வித்துவான்களும் வந்திருந்தார்கள். ஆனால் வாக்கியபஞ்சாங்கம் கணிப்போரிற் சிலரும், அதை ஆசரித்து வருதலோடு தர்மசாத்திரங்களில் பிரஜ்ஞையுள்ளவரென்று எண்ணப்படும் சிலரும் பஞ்சாங்க விஷயமாய்ச் சபையில் பேச மனமில்லாராய் ஏதோ ஒருபோக்குச்சொல்லி வாராமலிருந்துவிட்டார்கள். ஆனாலும் அன்று கூடிய சபையில் திருக்கணித பஞ்சாங்கத்திற்கு விரோதமாய்த் திதிவிஷயத்தில், வாக்கிய பஞ்சாங்கக்காரர்கள் வெகுகாலமாய்ச் சொல்லிக்கொண்டிருக்கும் சாத்திரம் யுக்தி இவைகள் சம்பந்தமான எல்லா முக்கியமான ஆட்சேபங்களும் செய்யப்பட்டன. அவ்வாக்ஷேபங்களும் அவற்றின் சமாதானங்களும் ஒன்றன்பின்னொன்றாக வருமாறு:—

முதல் ஆட்சேபம்.

பிரத்தியக்ஷ விஷயங்களுக்குப் பிரத்தியக்ஷத்தைக் காட்டிலும் மேலான பிரமாணம் இல்லையென்பது உண்மையே; ஆனால் அப்பிரத்தியக்ஷமான திதிக்குப் பிரத்தியக்ஷம் பிரமாணமாவது எப்படி? ஆகையால், பிரத்தியக்ஷத்தைப் பிரமாணமாகக்கொண்டு கணிக்கும் திருக்கணித பஞ்சாங்கக்காரர் திதிவிஷயமாகச் சொல்வது பிரமாணமாகாது.

சமாதானம்.

வாக்கியகாரர் திதியை அப்பிரத்தியக்ஷமென்று சொல்வது சரியன்று. கிரகங்களும் நட்சத்திரங்களும் எப்படிப் பிரத்தியக்ஷமோ அப்படியே திதியும் பிரத்தியக்ஷம். அஃது எவ்வாறெனில், சூரியசந்திரர்களாகிய கிரகங்கள் பூமியைச் சுற்றியோடிவருங்காலத்து அமாவாசைதோறும் இருவரும் பூமியின் ஒருபக்கத்திற் சேர்ந்து ஒரே கோட்டில் நிற்கிறார்கள். இருவரும் ஒருமுறை சேர்ந்து மறுமுறை சேரும்வரையில் அவர்களுக்குள்ள தூரத்தை முப்பதில் பாகித்து ஒவ்வொரு பாகத்தையும் ஒருதிதி என்கிறோம். ஒரு அமாவாசை முதல் மறு அமாவாசை வரையில் முப்பது திதிகளிருக்கின்றன. எந்தத் தினத்திலாவது, இன்றைத் திதி இன்னது, அது இத்தனை நாழிகைவரையிலுள்ளது, என்று நிச்சயிக்கவேண்டுமாயின், குறிக்கப்பட்ட தினத்தில் சூரியன் இவ்விடத்தில் இருக்கிறானென்றும், சந்திரன் இவ்விடத்தில் இருக்கிறானென்றும், முதலில் பிரத்தியட்சமாய்க் கண்டறிந்துகொண்டு, அவர்களுக்குள் இருக்கக்கூடிய மொத்தத்தூரமாகிய முப்பது பாகத்தில் அன்றையதினம் சந்திரன் சூரியனிடத்திலிருந்து இத்தனையாவது பாகத்திலிருக்கிறானென்றும், அதற்கு அடுத்த பாகத்தில் அவனது பிரவேசம் பின் இன்னகாலத்தென்றும், சற்று ஊன்றிப்பார்ப்போர் யாவருக்கும் எளிதில் பிரத்தியட்சமாய் விளங்கும். ஆகையால், சூரியசந்திராதிகளின் சாரங்கள் பிரத்தியக்ஷமானால் சூரியசந்திரர்களுக் கிடையேயுள்ள தூரமாகிய திதியும் பிரத்தியக்ஷமேயாம். ஆனதுபற்றிச் சூரியசந்திராதி கிரகசாரங்களுக்கு எப்படித் திருக்கணிதம் பிரமாணமோ அப்படியே திதிவிஷயத்திற்கும் பிரமாணமாம்.

வரும்.

கோபுசெட்டிப்பாளையம் வாலிபர்கள் சபையில், சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட உபந்நியாசம்.

(முன்தொடர்பு.)

—:o:—

அவருக்குப் பிறகு பகவான் வித்தியாரண்ணிய சுவாமிகள் அவதரித்து அவர்களுடைய காலத்தில் லோகானுக்கிரக நிமித்தியமாகச் சகல வேதாந்தத்தினுடைய பொருள்களை யெல்லாம்மனத்திற் சேகரித்துக்கொண்டு சகல வேதாந்தமெல்லாம் அதிகரிக்கமாட்டாத பேருக்கு எளிதாகப் பிரம்மதத்துவம் தெரியும்படி தம்மனதிலே யிருக்கிற பிரம்மானுபவத்தைப் பஞ்சதசப் பிரகரணத்தினால்வெளிபண்ணவேணுமென்றுவேதாந்தத்தைத் திருப்திதீபிகை, சித்திரதீபிகை, கூடஸ்ததீபிகை, தியானதீபிகை, நாடகதீபிகை, தத்துவாதத்துவ விவேகம், பஞ்சபூதவிவேகம், பஞ்சகோச விவேகம், துவிதவிவேகம், மகாவாக்கிய விவேகம், யோகானந்தம், ஆத்மானந்தம், அத்துவைதானந்தம், வித்தியானந்தம், விஷயானந்தம் என 15 பிரகரணமும் வாக்கியவிருத்திமுதலிய கிரந்தங்களும் அநேக கிரந்த பாஷ்யாதிகளும் செய்து சித்தியடைந்துவிட்டதாகக் கிரந்தங்களால் தெரியவருகிறது.

7-வது தற்காலத்துப் பிராமணர்களின் ஸ்திதியும் லௌகிக விஷயமும்.

மேற்கண்ட பிரகாரம் இக்கலியுகத்தில் அநேகவிதமான மதங்கள் ஏற்படவே ஒரு மதக்காரரோடு ஒருமதக்காரர் போராடவும் இப்போராட்டத்தில் இன்னும் அநேக துஷ்டமதிகளுக்கும் உண்டாயிற்று. இந்தக் கலகத்தை அடக்க அக்காலத்து இராஜாக்கள் நேரான க்ஷத்திரியருக்கு க்ஷத்திரியினிடத்து ஜனிக்காதவர்களாயும், சரியான சந்ததியாராகவும், ஸத்தியம், ஒழுக்கம், பராக்கிரமம் முதலிய க்ஷத்திரியர்களுக்குரிய சாமர்த்தியமில்லாதசாதாரணம் பிராகிருத ஜனங்களைப்போலச் சக்தியற்றவர்களாய் இருந்தபடியாலும், நந்தாந்தம் க்ஷத்திரியம் குலம் என்று சொல்லியபடி நவநந்தனோடே க்ஷத்திரியகுலம் விருத்திக்கு வாராமல் க்ஷீணகதியை யடைந்துபோயின.

வரும்.

ஓம்
பரப்ரம்மணேநம:.

ஆரியஜனபரிபாலினி.

இப்பெயர்வாய்ந்த பத்திரிகை இந்துஜனபூஷணி, ஞானமிர்தம், விகடதூதன், தஞ்சைஜனமித்திரன், ஸ்ரீலோகரஞ்சனி முதலிய பத்திரிகைகளைப்போல டிம்மி இரண்டுபாரங்கொண்டு இந்துக்களின் உபயோகத்திற்காக, 1889௵ மே௴ முதல் மாசம் இருமுறை புதிதாய்ப் பிரசுரஞ்செய்யப்படும்.

இதில் நமது தேசக்ஷேமம், பொதுஜனநன்மை, ஐக்கியம், ஆரியமதமேன்மை, ஆரியமதத்தைத்தாக்கும் புறமதகண்டனம், பாஹியமதங்களில் இந்துக்கள் செல்வதைத் தடுத்தல் முதலிய விஷயங்கள் எழுதப்படும்; அன்றி சென்னை - இந்துடிராக்ட் சொஸைட்டி, அதன் கிளைகள் அபிவிருத்தியைப்பற்றியும் பேசப்படும்.

தபாற்சார்சுடன்உள்ளூர்வெளியூர்கையொப்பக்காரர்களுக்கு.

	ரூபா.	அ.	பை.
பிரதி 1-க்கு வருஷம் 1-க்கு	0	12	0
இலங்கைக்கு ஷை ஷை	1	2	0
பிரதி 100-க்குத் தபாற்சார்ஜுடன்	1	4	0
தனிப்பத்திரிகைதபாற்கூலியில்லாமல்	0	0	3

இப்பத்திரிகை பரோபகாரத்தைக் கருதியே சொற்ப விலைக்கு விற்கப்படுகின்றது. இதன் முக்கிய கருத்து ஏஜெண்டுகள் மூலமாய் உள்ளூரிலும், வெளியூர்களிலும், ரெயில்ஸ்டேஷன் திருவிழா சந்தைகளிலும், இன்னும் ஜனங்கள் கூடும் மற்ற இடங்களிலும் காலணுவீதம் விற்கச்செய்யவேண்டுமென்பதே. இதற்கு ஒவ்வொருவரும் சகாயஞ்செய்தல் வேண்டும். கையொப்பங்கள் விசேஷமாய்ச் சேர்ப்பிப்பதோடு, ஒவ்வொரு ஊர்களிலும் பத்திரிகைகளை விற்பதற்குத் தக்க ஏஜெண்டுகளையும் ஏற்படுத்திக்கரவேண்டியது.

முன்பணமின்றி யாருக்கும் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

1889௵ ஏப்ரல்௴ 12உக்குச்சரியான விரோதி௵ சித்திரை௴ 1உ சுக்கிரவாரம், இரண்டு பக்கங்கொண்ட பத்திரிகை ஒன்று மாதிரிக்கு வெளியாயிற்று. அது வேண்டுவோர், அரை அணா ஸ்டாம்பு முன்பு அனுப்பினால் 10 பத்திரிகைகள் அனுப்பப்படும். பிறகு சந்தா அனுப்பினவர்களுக்கு இவ்வருஷம் மே௴ முதல் அந்தமாதிரி நாலுபக்கங்கொண்ட பத்திரிகை கிரமாய் வரும்.

இப்பத்திரிகையைக் குறித்து இன்னும் ஏதேனும் அறிய விரும்புவோரும், மணியார்டர் முதலிய அனுப்புவோரும அடியிற் கையொப்பமிட்டவர் பேருக்கே அனுப்புதல்வேண்டும். நட்பேட் கடிதங்கள் வாங்கப்படமாட்டா.

மதராஸ்ரிப்பன் பிரெஸ்,
316, தம்புசெட்டிவீதி,
சென்னை 1-4 89.

இங்ஙனம்,
சை. ர. நமசிவாயசெட்டியார்,
ஷை பத்திரிகையின் மானேஜர்.

Tamil Works by P. Soondaram Pillay M. A.
Professor of Philosophy; College; Trevandrum.

1.	An Introduction to Science	0	8	0
2.	Tha Indian Hermit: a poem	0	0	6
3.	Manoonmanyan: a play.	(in the press		

Apply to the author or to the Manager of the Ripon) Press No. 316. Thamboo Chetty street Madras.

திருவனந்தபுரம் காலேஜ் தர்க்காதி சாஸ்திர பண்டிதர்
M. A. சுந்தரம்பிள்ளையால் இயற்றப்பட்டநூல்கள்.

நூற்றொகைவிளக்கம்.	0	8	0
சிவகாமி சரிதம்.	0	0	6
மனோன்மணீய நாடகம். (அச்சிலிருக்கின்றது)			

விரும்புவோர் மேற்படியாரிடத்திலோ சென்னை ரிப்பன் பிரெஸ் மானேஜரிடத்திலோ அபேக்ஷிக்கவேண்டியது.

விளம்பரம்.

யாவர்க்கும் உபயோகம்!!

ப்ரம்மவித்தியா துவக்கிய முதல் இரண்டுவருடங்கள் வரையிலுமுள்ள பத்திரிகைகளனைத்தும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு பயிண்டுசெய்யப்பட்டபுஸ்தகங்கள் 50-இ விலைபெற்றதுபோக பாக்கியுள்ளகாப்பிகள் சாற்பகம உள்ளகாபி மிகசொற்பமத; லின், ஒருவருடப்புத்த 1தாகே-க்கு 2—8—0 ஆக இரண்டுவருடப்புத்தகங்கள் 5-ரூபாய்க்கு விற்கப்படும். வேண்டுவோர், போஸ்டேஜ் உள்பட 5—6—0 மாகச்சேர்த்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். போனால் வராது.

இந்துடிராக்ட் சொஸைட்டி.

(இந்து லகுலேக சங்கம்.)

இஃது 1887௵ ஏப்ரல்௴ 27உ ஸ்தாபிக்கப்பட்டது

இச்சங்கத்தின் கருத்து:—இந்துமதத்தைப் பரவச்செய்து, அதன் விரோதிகளைக் கண்டித்துத் தேசக்ஷேமத்தை நாடுதலாம். இச்சங்கத்தில் மெம்பர்களாகச்சேர விருப்பமுள்ளவர்கள் ௵ 1-இ குறைந்த சந்தா 1—4—0 முன்பணமாகக்கட்டவேண்டியது.

ஏப்ரல்௴ முதல் மறுவருஷம் மார்ச்சு௴ வரையில் அந்தந்தவருஷமுடிவாகும்.

அக்கிராசனாதிபதி:— R. சிவசங்கரபண்டியா.
B. A. F. T. S. அவர்கள்

வெளியூர் உப அக்கிராசனாதிபதி:— சிதம்பரம் ப்ரம்மவித்தியாபத்திராதிபர், ப்ரம்மஸ்ரீ த. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கள்

காரியதரிசி:— ஸ்ரீமான் W.A. கிருஷ்ணமாசாரியார்
B. A. அவர்கள்.

இந்தச் சங்கத்தைப்பற்றி மற்றவிஷயங்களை அறியவிரும்புபவர்கள், அரையணாஸ்டாம்பாவது, ரிப்ளை கார்டாவது அனுப்பிக் கேட்டுக்கொள்ளலாம்.

கடவுள்துணை.

Terms:—Cash. விலை ரொக்கம்.

NOW READY FOR SALE.

விரோதவருஷத்திய

ரிப்பன் தமிழ்ப்பாக்கெட் பஞ்சாங்கம்.

விற்பனைக்குத் தயாராக விருக்கிறது.

பிரதி 1-க்கு விலை அணா ஆறு; பிரதி 1-க்கு தபாற்கூலி அணா அரை.

பாக்கிங் சார்ஜு பிரதி 1-க்கு 0-0-6; 10-க்கு 0-2-0; 25-க்கு 0-4-0; 50-க்கு 0-6-0; 100-க்கு 0-8-0.

ஒரேமுறையில் 10 புத்தகங்கள் வாங்குவோர்க்கு 1-ம்; 25-க்கு 3-ம்; 50-க்கு 7-ம்; 100-க்கு 15-ம்; கம்மீஷன் கொடுக்கப்படும்.

கொஞ்சம் காப்பிகள்தான் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றனவாகலின் வேண்டுவோர் கூடிய சீக்கிரம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

மதராஸ்ரிப்பன்பிரெஸ்
316தம்புசெட்டி வீதி
சென்னை.

இங்ஙனம்,
சை. இரத்தினசெட்டியார்,
சொந்தக்காரர்.

𑌶𑍍𑌰𑍀𑌚𑌿𑌦𑌂𑌬𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌶𑌾𑌲𑌾𑌯𑌾𑌂
𑌮𑍁𑌦𑍍𑌰𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑌾𑌨𑌿 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌾𑌨𑌿

[illegible]	௦	௧	௦
𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑌙𑍍𑌕𑌰𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌾 𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌲𑌹𑌰𑍀 [illegible]	௦	௧	௦
𑌵𑌰𑌦𑌰𑌾𑌜𑌸𑍍𑌤𑌵𑌃 (𑌮𑍂𑌲𑌮𑍍) 𑌤𑌥𑌾 [illegible]	௦	௧	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௧	௬
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௧	௬
[illegible]	௦	௩	
[illegible]	௦	௫	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௮	௦
𑌶𑍍𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑍀𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾.	௦	௧	௦
[illegible]	௦	௦	௬

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌪𑍍𑌪𑌯𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌾𑌃 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌾𑌃.

[illegible] 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌵𑍇𑌕𑌃.	௨	௦	௦
𑌮𑌧𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌖𑌮𑌰𑍍𑌦𑌨𑌂 𑌮𑌧𑍍𑌵𑌮𑌤𑌵𑌿𑌧𑍍𑌵𑌂𑌸𑌨𑌂 𑌚.	௦	௧௨	௦
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌰𑍍𑌕𑌸𑍍𑌤𑌵𑌃 𑌲𑌘𑍁𑌵𑌿𑌵𑌰𑌣𑌂 𑌚.	௦	௮	௦
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌂 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾 𑌚.	௦	௬	௦
𑌶𑌿𑌵𑌧𑍍𑌯𑌾𑌨𑌪𑌦𑍍𑌧𑌤𑌿𑌃. (𑌮𑍂𑌲𑌮𑍍)	௦	௧	௦
𑌶𑌿𑌵𑌮𑌹𑌿𑌮𑌕𑌲𑌿𑌕𑌾𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃 [illegible] 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌮𑌹𑍋𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌜𑌚𑍂𑌡𑌾𑌮𑌣𑌿 [illegible] 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾 𑌚.	௦	௭	௦
𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌤𑌾𑌤𑍍𑌪𑌰𑍍𑌯𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌃 𑌸𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌃.	௦	௨	௦
𑌭𑌾𑌰𑌤𑌤𑌾𑌤𑍍𑌪𑌰𑍍𑌯𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌃 𑌸𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌃.	௦	௨	௦
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌲𑍇𑌶𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌃 (𑌮𑍂𑌲𑌮𑍍)	௧	௦	௦
𑌰𑌤𑍍𑌨𑌤𑍍𑌰𑌯𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌾 𑌸𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾.	௦	௨	௦
𑌪𑌞𑍍𑌚𑌰𑌤𑍍𑌨𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃 𑌸𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾.	௦	௧	௦
𑌶𑌿𑌵𑌕𑌰𑍍𑌣𑌾𑌮𑍃𑌤𑌮𑍍.	௦	௬	௦

—𑌅𑌨𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌾 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌾𑌃—

[illegible] (𑌨𑌾𑌮𑌾𑌵𑌲𑌿𑌃)	௦	௧௧	௦
[illegible]	௦	௮	௦
[illegible] (𑌨𑌾𑌮𑌾𑌵𑌲𑌿𑌃)	௦	௦	௬
𑌬𑌾𑌲𑌨𑍀𑌤𑌿𑌃 (𑌨𑌾𑌮𑌾𑌵𑌲𑌿𑌃)	௦	௧	௦
[illegible] 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍋𑌤𑍍𑌤𑌰𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌂	௦	௫	௦
𑌚𑌿𑌦𑌂𑌬𑌰𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 [illegible]	௦	௧௦	௦
𑌚𑌿𑌦𑌂𑌬𑌰𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌂	௧	௦	௬

[illegible]

Printed and Published for the Proprietor at the
Brahmavidya Press. Chidambaram.